*செய்தி வெளியீடு எண்: 01* *நாள்: 01.12.2019*

**தேனி மாவட்டம்,**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
**முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டத்தின் கீழ்**
**2,619 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 68 ஆயரம் மதிப்பிலான**
**அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்:-**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம் கம்பம் ஜெ.எஸ்.டி மஹாலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சாபில் இன்று (01.12.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரசு விழாவில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டத்தின் கீழ் 2,619 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 68 ஆயிரம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது,

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்கள் வாழ்விற்கு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை நீண்ட காலத்திற்கு பயன்தரும் வகையில் தொலைநோக்கு பார்வையுடன் திட்டங்களின் பயன் நேரடியாக பொதுமக்களை சென்றடையும் வண்ணம் திறம்பட செயல்படுத்தி உள்ளார்கள். அவ்வழியில் மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசு புதிதாகவும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மா தரம் வாய்ந்த கல்வியினை ஏழை, எளிய மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் பொருட்டு மாநிலத்தின் மொத்த வருவாயில் நான்கில் ஒரு பகுதி நிதியினை கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கீடு செய்து எண்ணற்ற கல்வி சார்ந்த பல்வேறு நலத்திட்டங்களை தீட்டி சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011-ஆம் ஆண்டு முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து கல்விக்கு 20 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து வந்தார்கள். தற்போது படிப்படியாக உயர்ந்து பள்ளி கல்வித்துறைக்கு 33 ஆயிரம் கோடி ரூபாயும், உயர் கல்வித்துறைக்கு 4 ஆயிரம் கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

மாணவ, மாணவியர்களின் கல்வி ஏழ்மையின் காரணமாக எந்த ஒரு சூழ்நிலையிலும் தடைபடக் கூடாது என்பதற்காக கல்வி ஊக்கத்தொகை, விலையில்லா பாட புத்தகம், நோட்டுப்புத்தகம், வருடத்திற்கு நான்கு ஜோடி சீருடைகள், காலணிகள், புத்தகப்பை, வடிவியல் பெட்டிகள், வரைபட புத்தகங்கள், கிரையான்ஸ், கணித உபகரணங்கள், பேருந்து பயணஅட்டை, விலையில்லா மிதி வண்டிகள், மாணவ, மாணவியர்கள் உலகளவிய கல்வி விலையில்லா மடிக்கணிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தமிழக மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்திற்கு தேவையான உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இருப்பிடம் போன்றவற்றிக்கு உத்திரவாதம் அளித்திடும் வகையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசியினையும், உடுத்தும் உடைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் விலையில்லா வேஷ்டி, சேலைகளையும், இருக்க இருப்பிடம் எனும் வகையில் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கும் திட்டம், முதலமைச்சரின் சூரிய ஒளி சக்தியுடன் கூடிய பசுமை வீடு, அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் போன்றவற்றை செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தினை குடிசை இல்லாத தமிழகமாக மாற்றி 2023-க்குள் அனைவருக்கும் காங்கீரிட் வீடுகள் கட்டி வழங்கப்படும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதனடிப்படையில், தமிழகத்தில் கணக்கெடுக்கப்பட்டதில் 12 இலட்சம் ஏழை, எளிய குடிசை பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.75 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்சமயம் வரை 6 இலட்சம் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் நலன் கருதி மனிதர்களுக்கென அவசர மருத்துவ உதவி அளிப்பதற்காக அரசால் 108 ஆம்புலன்ஸ் சேவை தொடங்கி வைக்கப்பட்டு, அவசர காலங்களில் மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கால்நடைகளின் நலனை கருத்தில் கொண்டும், கால்நடைகளுக்கென அவசர மருத்துவ அளிப்பதற்காக கால்நடை மருவத்து சேவை ஊர்தி இன்றைய தினம் நமது மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, கால்நடை வளர்ப்போர்கள் 1962 என்ற அவசர எண்ணை தொடர்பு கொண்டு, கால்நடைகளுக்கான அவசர மருத்து சிகிச்சையினை பெறலாம்.

மேலும், பொதுமக்கள் தங்களின் தேவை மற்றும் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்வு காணும் வகையில், மக்கள் குறை தீர்க்கும் கூட்டம், மாற்றுத்திறனாளிகள் குறை தீர்க்கும் கூட்டம், ஓய்வூதியதாரர்கள் குறை தீர்க்கும் கூட்டம், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் அம்மா திட்ட முகாம், மக்கள் தொடர்பு முகாம் போன்றவைகள் மூலம் பொதுமக்களால் அளிக்கப்படும் மனுக்களுக்கு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு, பொதுமக்களின் தேவைகள் மற்றும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொதுமக்களின் குறைகளை மனு மூலமாக பெற்று, உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, மக்களைத் தேடி அரசு என்ற உன்னத நிலையை ஏற்படுத்தும் வகையில் “முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டம்” அரசால் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி, மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளிலுள்ள அனைத்து வார்டுகளிலும் மற்றும் அனைத்து கிராமங்களிலும், அனைத்து வட்டங்களிலும் உள்ள கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி அலுவலங்களில் துணை வட்டாட்சியர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் குழு நேரடியாக பொதுமக்களிடம் மனுக்களை பெற அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் உள்ள 5 வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 6,904 மனுக்கள் பெறப்பட்டு, அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெறும் விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலண்மைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, பேரூராட்சித்துறை, வேளாண்மைத்துறை உட்பட பல்வேறு துறைகளின் சார்பில் 2619 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.5 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன. எனவே, தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை கொண்டு பொது மக்கள் வாழ்வில் வளம் பெற வேண்டும் என தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், விலையில்லா வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம், சமூகப் பாதுகாப்புத்திட்டம், பட்டா மாறுதல் ஆகிய திட்டங்களின் கீழ் 2,487 பயனாளிகளுக்கு ரூ.383.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.24.64 இலட்சம் மதிப்பீட்டிலும், பேரூராட்சித்துறையின் சார்பில் 13 பயனாளிகளுக்கு ரூ.27.30 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் வேளாண்மைத்துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 24 பயனாளிகளுக்கு ரூ.2.94 இலட்சம் மதிப்பிலான வேளாண் இடுபொருட்களையும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு ரூ.36.42 இலட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்களையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.1.29 இலட்சம் மதிப்பிலான எலுமிச்சை நாற்றுகளையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் கட்டுமான தொழிலாளர்கள் மாதாந்திர உதவித்தொகை திட்டத்தின் கீழ் 16 பயனாளிகளுக்கு ரூ.1.92 இலட்சம் மதிப்பிலான உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் சிறப்பு பள்ளிகளுக்கு மென்பொருள் ஐ-பேட் வழங்கும் திட்டத்தின் கீழ் 15 பள்ளிகளுக்கு ரூ.5.78 இலட்சம் மதிப்பிலான மென்பொருள் ஐ-பேட்களையும் வழங்கினார்.

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் விலையில்லா கறவை மாடு, வெள்ளாடு வழங்கும் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.0.90 இலட்சம் மதிப்பிலான கறவை மாடு, வெள்ளாடுகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா தையல் இயந்திரம், தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு 0.21 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரம், தேய்ப்பு பெட்டிகளையும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் பொருளாதார முன்னேற்ற கழகத்தின் (தாட்கோ) சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.16.23 இலட்சம் மதிப்பிலான கறவை மாடு, டிராக்டர், ஆட்டோ வாங்குவதற்கான மானியத்தொகையினையும் என மொத்தம் 2,619 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 68 ஆயிரம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவில், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், சார் ஆட்சியர்கள் டாக்டர் ஆர்.வைத்திநாதன், இ.ஆ.ப., ச.சிநேகா, இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) எஸ்.பாலசந்தர், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, உத்தமபாளையம் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) எம்.முருகசெல்வி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.எம்.சையதுகான், அரசுத்துறை அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**